தினகரன்
டிசம்பர் 17, 2023 ஞாயிற்றுக்கிழமை

# ஏனாம் ஜிப்மர் கிளையில் 18ம் தேதி முதல் வெளிப்புற சிகிச்சை பிரிவு துவக்கம்

## இயக்குனர் தகவல்

புதுச்சேரி, டிச. 17: ஏனாம் ஜிப்மர் மருத்துவமனை கிளையில் வரும் 18ம் தேதி முதல் வெளிப்புற சிகிச்சை பிரிவுகள் துவங்கவுள்ளதாக இயக்குனர் ராகேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியின் மற்றொரு பிராந்தியமான ஏனாமில் புதுச்சேரி அரசின் 80 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அங்கு உயர் மருத்துவ சேவை இல்லாததால், ஆந்திராவின் காக்கிநாடா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனால் பொதுமக்கள் உரிய மருத்துவ சேவை கிடைக்காமல் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர்.

நீண்ட தூரத்தில் இருந்து புதுச்சேரியின் ஜிப்மர் மருத்துவமனைக்கு வந்து செல்வதில் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வந்தனர். இதனை தொடர்ந்து ஜிப்மர் மருத்துவமனை கிளையை ஏனாமில் ஆரம்பிக்க வேண்டுமென பொதுமக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

கடந்த காங்கிரஸ் ஆட்சியில் அப்போதைய முதல்வர் நாராயணசாமி, சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த மல்லாடிகிருஷ்ணா ராவ் ஆகியோர் ஜிப்மர் கிளை அமைப்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இதனையேற்று கடந்த 2017ம் ஆண்டு ஏனாமில் ரூ.100 கோடியில் ஜிப்மர் கிளை மருத்துவமனை அமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்கியது. தொடர்ந்து மருத்துவமனையின் கட்டுமான பணிகள் நடந்து வந்தது.

90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், வரும் 18ம் தேதி முதல் அங்கு வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் மருத்துவகல்லூரி இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஏனாமில் ஜிப்மர் மருத்தமனையின் பல்நோக்கு மருத்துவ ஆலோசனை கிளையில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு வரும் 18ம் தேதி துவங்கி நடைபெறவுள்ளது. அதன்படி காலை 8.30 மணி முதல் காலை 10.30 மணிவரை சீட்டு பதியலாம், அதேபோல் 8.30 மணிமுதல் மதியம் 12.30 மணி வரை வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு செயல்படும். இந்த இடைப்பட்ட காலத்தில் உட்புறநோயாளிகள், மகப்பேறு, அறுவை சிகிச்சை கூடம் ஆகியவை விரைவில் ஏற்படுத்தப்படும். இதனை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து தமிழ் திசை 4 CHENNAI திங்கள், டிசம்பர் 18, 2023

# ஏனாம் ஜிப்மர் கிளையில் இன்று முதல் வெளிப்புற சிகிச்சை

● புதுச்சேரி

ஏனாம் ஜிப்மர் கிளையில் இன்று முதல் வெளிப்புற சிகிச்சைப் பிரிவு இயங்க உள்ளது.

புதுச்சேரி பிராந்தியமான ஏனாம் அரசு மருத்துவமனையில் உயர் மருத்துவ சேவை இல்லாததால் நோயாளிகள் ஆந்திராவின் காக்கி நாடா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதனால் உயர் சிகிச்சை கிடைக்கும் வகையில், ஜிப்மர் மருத்துவ மனை கிளையை ஏனாமில் ஆரம்பிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து கடந்த 2017-ம் ஆண்டு ஏனாமில் ரூ.100 கோடியில் ஜிப்மர் கிளை மருத்துவமனை அமைக்க அரசு நிதி ஒதுக்கியது. தொடர்ந்து மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் நடந்தன. தற்போது 90 சதவீத பணிகள் நிறை வடைந்துள்ளது.

இந்நிலையில் இன்று (டிச. 18) முதல் அங்கு வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் மருத்துவக் கல்லூரி இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஏனாமில் ஜிப்மர் மருத்துவமனையின் பல்நோக்கு மருத்துவ ஆலோசனை கிளையில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு திங்கள் முதல் இயங்கும். காலை 8.30 மணி முதல் காலை 10.30 மணிவரை சீட்டு பதியலாம்.

அதேபோல் 8.30 மணிமுதல் மதியம் 12.30 மணி வரை வெளிப்புற நோயாளிகள் சிகிச் சைப் பிரிவு செயல்படும். இந்த இடைப்பட்ட காலத்தில் உட்புற நோயாளிகள், மகப்பேறு, அறுவை சிகிச்சை கூடம் ஆகியவை விரைவில் ஏற்படுத்தப் படும். இதை பொதுமக்கள் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
18.12.2023 (திங்கட்கிழமை)

# ஏனாமில் ஜிப்மர் கிளை தொடக்கம்

ஏனாம், டிச.18-

ஜிப்மர் மருத்துவக்கல்லூரி இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஏனாமில் ஜிப்மர் மருத்துவமனை கிளை புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. இங்கு வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இன்று (திங்கட்கிழமை) முதல் செயல்பட உள்ளது. அதன்படி காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை சீட்டு பதியலாம். இந்த பிரிவு 12.30 மணி வரை செயல்படும். மேலும் உள் நோயாளிகள் சிகிச்சை பிரிவு, மகப்பேறு, அறுவை சிகிச்சை கூடம் ஆகியவை விரைவில் பயன்பாட்டுக்கு வரும். இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.